இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2022. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 146 | இதழ் : 14 | திகதி : 04.09.2022 | விலை : 50.00

# தமிழ் மக்களின் தேவைகளிலும் அபிவிருத்தியிலும் உடன் கவனம் செலுத்துங்கள்

## -நேரடிச் சந்திப்பில் ஜனாதிபதியிடம் யாழ் ஆயர் வேண்டுகோள்-



யாழ் ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களைக் கடந்த மாதம் 18ம் திகதி மாலை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து வடக்கில் மக்களின் தேவைகளையும் அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியும் உடன் கவனம் செலுத்தி ஆவன செய்யுமாறு வேண்டிக் கொண்டார்.

வடக்கு மக்களின் அத்தியாவசியப் பிரச்சினைகள், தேவைகள் பற்றி எடுத்துக் கூறும் நோக்குடனேயே இச் சந்திப்பு இடம் பெற்றது. இச் சந்திப்பின் போது யாழ் ஆயர் அவர்கள் ஜனாதிபதியிடம் முன்மொழிந்த விடயங்களாவன:-

- ❖வடக்கில் தமிழ் மக்களின் வாழ் நிலங்களும், விளை நிலங்களும் இன்றும் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளன. அவற்றை உடன் விடுவித்து மக்கள் சுதந்திரமாகத் தம் சொந்த மண்ணில் வாழ விடுங்கள்.
- ❖போரில் காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டு பிடித்து, உறவினர்களின் அழுகுரலுக்கு செவிமடுத்து,அவர்களுக்கு ஆறுதல் வழங்க உடன் நடவடிக்கை எடுங்கள்.
- ❖போரின் போது கைது செய்யப்பட்டு நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டோர் விடுவிக்கப்பட நடவடிக்கை எடுங்கள்.
- ❖வடக்கின் உயர்கல்வி நிறுவனங்கள் இல்லாமையால் இளம் ஆண், பெண் பிள்ளைகள் தம் மேற்கல்வியைத் தொடர முடியாத அவல நிலையில் உள்ளனர். அவர்கள் உயர்கல்வியைத் தொடர வாய்ப்பை ஏற்படுத்தி, உயர்கல்வி நிறுவனங்களை வடக்கில் ஆரம்பியுங்கள்.
- ❖வேளாண்மை வடக்கின் பிரதான தொழிலாகும். வேளாண்மைத் தொழிலை வடக்கில் அபிவிருத்தி செய்யுங்கள்.
- ❖நோர்வேயின் முன்னாள் அமைச்சர் மீன்பிடிப் படகுகள் உற்பத்தியை வடக்கில் ஆரம்பிக்க அனுமதியளியுங்கள், அதன் வழியாக எம் இளையோர் வேலைவாய்ப்பு பெறும் சாத்தியம் அதிகம் ஏற்படும்.
- ❖கிளிநொச்சியில் மிளகாய்ச் செய்கையை அதிகரிக்க உதவுங்கள். இதன் வழியாக மிளகாயை இறக்குமதி செய்யப் பயன்படும் பெரும்தொகை அமெரிக்க டொலர்கள் மிகுதியாகும்.
- ❖அதே போல் பால் உற்பத்தியை அதிகரிக்கச் செய்து, இந்திய AMUL நிறுவனத்தின் அனுசரனையுடன் வெண்ணை மற்றும் பால் உற்பத்திப் பொருட்களைக் கூடுதலாக உற்பத்தி செய்ய உதவுங்கள்.
- ❖பலாலியில் அமைந்துள்ள சர்வதேச விமான நிலையத்தை வெளிநாட்டுப் பயணங்களுக்குப் பயன்படுத்துங்கள்.
- ❖காங்கேசன்துறை துறைமுகத்தின் ஊடாக இந்திய போக்குவரத்தை ஆரம்பித்து தென்னிந்தியாவிற்கு மக்கள் யாத்திரை மேற்கொள்ளவும், மக்கள் பொருட்களைக் கொண்டுவரக்கூடிய வகையில் அதன் பாவனையை மேம்படுத்துங்கள்.

மேற்கூறப்பட்ட விடயங்களை உடன் கருத்தில் எடுத்து வடக்குக் கிழக்கு மக்கள் அமைதியான வாழ்வு வாழ வழிசமைக்குமாறு ஆயர் அவர்கள் இச் சந்திப்பின் போது ஜனாதிபதியிடம் வலியுறுத்திக் கேட்டிருந்தார்.

## அகவொளியில் பட்டமளிப்பு விழா




யாழ். புனித பத்திரிசியார் வீதியில் அமைந்துள்ள அகவொளி குடும்ப உள ஆற்றுப்படுத்தல் நிறுவனம் அயர்லாந்து கோல்வே தேசிய பல்கலைக் கழகத்துடன் இணைந்து நடாத்திய உள ஆற்றுப்படுத்தல் டிப்ளோமாக் கற்கை நெறியை நிறைவுசெய்த 3அணி மாணவர்களுக்கான பட்டமளிப்பு நிகழ்வு கடந்த 20ஆம் திகதி சனிக்கிழமை யாழ் அகவொளி மண்டபத்தில் நடைபெற்றது.

அகவொளி நிறுவன இயக்குநர் அருட்திரு ஸ்ரலின் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கலந்து கற்கை நெறியை நிறைவுசெய்த மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கிவைத்தார். இந் நிகழ்வில் 39 மாணவர்கள் டிப்ளோமாக் கற்கைநெறியை நிறைவுசெய்து சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டனர்.

## திருப்பாலத்துவ சபையின் ஒருங்கிணைப்பாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை



தேசிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட திருப்பாலத்துவ சபை ஒருங்கிணைப்பாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை இம்மாதம் 22ம், 23ம், 24ம், திகதிகளில் கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்தில் நடைபெற்றது. இலங்கையின் அனைத்து மறை மாவட்டங்களிலிருந்தும் 150 குருக்கள் துறவிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

யாழ். மறை மாவட்டத்திலிருந்து மறைமாவட்ட இயக்குநர் அருட்திரு எயின்சிலி றொசான் அடிகளின் தலைமையில் பத்துக் குருக்களும் ஏழு அருட்சகோதரிகளும் இதில் பங்குபற்றியமையும் இங்கு குறிப்பிடத் தக்கது.

## இராணுவத் தளபதி யாழ். ஆயருடன் சந்திப்பு



வடமாகாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட இராணுவக் கட்டளைத் தளபதி லெப்ரினன் ஜெனரல் விகும் லியனகே அவர்கள் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களைக் கடந்த 26ஆம் திகதி சந்தித்தார்.

யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் யாழ் குடாநாட்டின் தற்போதைய நிலைமைகள் பற்றியும் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடினார்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## ஜெனீவாவுக்கு முன்னர் ஜனாதிபதி - ஆயர் சந்திப்பு

திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் முதன் முறையாக யாழ் ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களைச் சந்தித்து உரையாடியுள்ளார். சென்ற மாதம் 18ம் திகதி மாலை ஜனாதிபதி மாளிகையில் இச் சந்திப்பு நடைபெற்றிருக்கிறது. தமிழ் மக்களின் தேவைகளையும் அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியும் ஆயர் அவர்கள் விரிவாக ஜனாதிபதி அவர்களிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

குறிப்பாக வடமாகாணத்தில் மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து எடுத்துரைத்திருக்கின்றார்.

வடமாகாணத் தமிழ் மக்களின் வாழ் நிலங்கள், விளை நிலங்கள் தொடர்ந்தும் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளன. அவற்றை விடுவித்து மக்கள் சுதந்திரமாகத் தமது சொந்த மண்ணில் வாழ்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

வடக்குக் கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட இளைஞர்கள், யுவதிகளின் உறவினர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். உறவினர்களுடைய அழுகுரல்களுக்குச் செவி சாய்த்து உரிய பதில் வழங்க வேண்டுமென ஆயர் வினயமாகக் கேட்டிருக்கிறார்.

ஜெனீவா மனித உரிமைச் சபையின் அமர்வு நடைபெறவுள்ள நிலையில் யாழ் ஆயர் ஜனாதிபதியைச் சந்தித்து இவ்வாறு உரையாடியிருப்பது முக்கியமானது. யாழ் ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் போரின் பக்கவிளைவுகளுக்கும் தீர்வுகாண வேண்டுமென வலியுறுத்தியதால், அதனை நிறைவேற்ற வேண்டிய அவசர அவசியத் தேவை அரசாங்கத்துக்கு உண்டு.

போர்க் குற்றங்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக ஜெனீவா மனித உரிமைச் சபையில் ஏற்னவே இலங்கை மீது குற்றச்சாட்டுக்கள் உண்டு. இலங்கை எந்தவொரு விடயத்திற்கும் உரியமுறையில் பொறுப்புக் கூறவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்களாலும் பகிரங்கமாகக் குற்றம் சுமத்தியுள்ள நிலையில் ஆயர் சந்தித்து விடுத்த வேண்டுகோள் பெறுமதி வாய்ந்ததாகவே கருதவேண்டும்.

வடக்குக் கிழக்கில் 2009 இற்குப் பின்னரான சூழலில் அதுவும் பதின்மூன்று ஆண்டுகள் சென்றுவிட்ட பின்னரும் தொழில் வாய்ப்புகள் தமிழ் இளைர்களுக்கு உரிய முறையில் கிடைப்பதில்லை. உயர்கல்வி கற்கும் சந்தர்ப்பங்களும் மிகக் குறைவு. இந்தவொரு நிலையில் நிரந்தர அரசியல் தீர்வுக்கு முன்னர், போரின் பக்க விளைவுகளுக்குரிய தீர்வை இனிமேலும் காலதாமதம் செய்ய முடியாது என்பதை ஆயர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

ஜெனீவா மனித உரிமைச் சபையில் 2015 ஆம் ஆண்டில் இருந்து இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் முடிவடைந்துள்ள நிலையில், முன்னைய அரசாங்கம் மீண்டும் பொறுப்புக் கூறலைத் தட்டிக் கழித்திருந்தது.

ஆனால் துரதிஸ்டவசமாக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதால், 2015 ஆம் அண்டில் இருந்து 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியில் இருந்தபோது தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டியது அவருக்குரிய தலையாய கடமையாகும்.

அந்த அடிப்படையில் ஆயர் நேரடியாகச் சந்தித்துப் பல விடயங்கள் குறித்துப் பேசிய பின்னரான சூழலில், வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைக் கையாளும் விடயத்தில் ரணில் விக்கிரமசிங்க புதிய அணுகு முறை ஒன்றைப் பின்பற்றுவார் என்று எதிர்பார்க்கலாம்.

சாதாரண தமிழ் மக்களைப் பொறுத்தவரை ரணில் விக்கிரமசிங்க மீதும் நம்பிக்கை இல்லாத ஒரு நிலையில், ஜனாதிபதி என்ற கௌரவத்துடன் ஆயர் சந்தித்து விளக்கமளித்த உடனடிப் பிரச்சினைகள் குறித்துக் கவனம் செலுத்த வேண்டும்.

இல்லையேல் இனப்பிரச்சினைத் தீர்வு, நல்லிணக்கம் என்ற பேச்செல்லாம் கானல் நீராகிவிடும். நம்பிக்கையீனங்களும் மேலும் அதிகரிக்கும்.

அரசாங்கம் மீதான தமிழர்களின் அவ நம்பிக்கைகளைப் போக்க வேண்டுமானால், ஆயர் சுட்டிக்காட்டியது போன்று முதலில் போரின் பக்க விளைவுகளுக்கு உடனடித் தீர்வை ரணில் அரசாங்கம் முன்வைக்க வேண்டும்.

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வித்தாயின் வரவேற்பு

**- ஆயர் பேரருட்திரு அன்ரன் இரஞ்சித் பிள்ளைநாயகம் அவர்கள் தனது கல்வித்தாயிடம் -**

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர் பேரருட்திரு அன்ரன் இரஞ்சித் பிள்ளைநாயகம் அவர்கள் 1966ம் ஆண்டு புரட்டாதி மாதம் 23ம் திகதி இரட்டைப் புதல்வர்களில் ஒருவராக யாழ்ப்பாணத்தில் பிறந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பழைய மாணவரான இவர் 1988 முதல் 1993 வரையான காலப்பகுதியில் விஞ்ஞான பீடத்தில், கணிதத் துறையின் புள்ளிவிபரவியல் துறையில் சிறப்புப் பிரிவில் தேர்ச்சிபெற்றார். பின்னர் அதே துறையில் உதவி விரிவுரையாளராகவும் கடமையாற்றினார்.

குருவாக இறைபணிக்குத் தன்னை அர்ப்பணிக்க விரும்பி, யாழ்ப்பாணம் புனித பிரான்சிஸ் சவேரியார் குருமடத்தில் இணைந்து, தொடர்ந்து கொழும்பு அலோசியஸ் குருமடம், கண்டி அம்பிட்டிய தேசிய குருமடம் போன்றவற்றில் பயின்று 2000ம் ஆண்டு புரட்டாதி மாதம் 16ம் திகதி கொழும்பு உயர் மறைமாவட்டப் பேராயர் பேரருட்திரு நிக்கலஸ் மார்க்கஸ் பர்னாந்து ஆண்டகையினால் குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டார். ஆயர் அவர்கள் தனது குருத்துவப் பணி வாழ்வின் போது, கல்விப் புலத்திற்கு ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக தன் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றினார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் அன்ரன் இரஞ்சித் பிள்ளைநாயகம் 2020 ஆம் ஆண்டு ஆடி மாதம் 13ம் திகதி கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் துணை ஆயராக நியமிக்கப்பட்டார்.

கொழும்புஉயர்மறைமாவட்டத்தின்துணை ஆயர் நியமனம் பெற்றதைத் தொடர்ந்து முதற் தடவையாக யாழ்ப்பாணம் வருகை தந்த ஆயர் அவர்களை அன்புடன் வரவேற்று ஒரு பாராட்டு விழாவிற்கான ஏற்பாட்டை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ நாகரிகத்துறை 2022 ஆனி மாதம் 15 ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு ஒழுங்கு செய்திருந்தது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் S.சிறிசற்குணராஜா கலந்து சிறப்பித்ததுடன், யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கலாநிதி P.J. ஜெபரட்ணம் அடிகளார் அவர்களும், அமலமரி தியாகிகள் சபையின் வட மாகாண முதல்வர் அருட்தந்தை யூஜின் பெனடிக்ட் அவர்களும் கலந்துகொண்டனர். மேலும் பல குருக்கள், துறவிகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் ஓய்வுபெற்ற வாழ்நாள் பேராசிரியர் P. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள், பேராசிரியர்கள், பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், மற்றும் ஏனைய பல நலன் விரும்பிகளும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். மெய்நிகர் ஊடாகவும் அருட்தந்தையர்கள், ஆசிரியர்கள், கிறிஸ்தவ நாகரிகத் துறையைச் சார்ந்த மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டு, தங்கள் வாழ்த்துக்களையும் கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் S. சிறிசற்குணராஜா அவர்கள் துணை ஆயர் பேரருட்திரு அன்ரன் இரஞ்சித் பிள்ளைநாயகம் அவர்களுக்கு மாலையணிவித்து வரவேற்றார். அதைத் தொடர்ந்து கிறிஸ்தவ நாகரிகத் துறைத் தலைவர் அருட்கலாநிதி J.C. போல் றொகான் அவர்களின் வரவேற்புரை இடம்பெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் S. சிறிசற்குணராஜா தனது உரையில் குருத்துவப் பணியின் அர்ப்பண வாழ்வின் மேன்மைகளைப் பற்றி எடுத்துரைத்தார். மேலும் தன்னிடம் கல்வி பயின்ற மாணவர் என்ற முறையில் தனது மகிழ்ச்சியையும் வாழ்த்தையும் ஆயர் அவர்களுக்குத் தெரிவித்தார். மேலும் 1980, 1990களில் மாணவர்களும் விரிவுரையாளர்களும் எதிர்நோக்கி, கடந்து வந்த கடினமான காலங்களையும் நினைவூட்டினார்.

தொடர்ந்துஓய்வுபெற்ற,வாழ்நாள்பேராசிரியர் P. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் ஆயரை வாழ்த்தியதுடன், கொழும்பில் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தமிழ் மாணவர்கள் கத்தோலிக்கப் பாடசாலைகளில் அனுமதி பெறுவதில்உள்ளசிரமங்களைஆயரின்கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

தமிழ் மொழி மூலமான கல்விக்கான வாய்ப்புக்களின் அவசியத்தை எடுத்துரைத்து, இதனை நடைமுறைப்படுத்துவதில் விசேட கவனம் செலுத்துமாறும் ஆயரிடம் ஒரு அன்பான கோரிக்கையை முன்வைத்தார்.

இந்நிகழ்வின் இறுதியில் உரையாற்றிய ஆயர், தான் எதிர்பாராத இத்தகையதொரு சிறப்பான வரவேற்பை ஏற்பாடு செய்த பல்கலைக்கழகச் சமூகத்திற்கு நன்றி தெரிவித்தார். தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற காலத்து சில நினைவுகளை யும் பகிர்ந்து கொண்டார். மின்சார வசதி கிடைக்காத காலங்களில் இரவு 11 மணி வரை பல்கலைக்கழகத்தில் மின்பிறப்பாக்கி மூலம் மின்சாரம் வழங்கப்பட்ட தால் இரவு நேரங்களிலும் பல்கலைக்கழகத்திலேயே தங்கிப் படித்த அனுபவங்களை நினைவு கூர்ந்தார்.

மேலும் இடர்கள் நிறைந்த காலத்தில் மாணவர்களுக்கு மாதத்திற்கு ஒருமுறை வழங்கப்பட்ட ஒரு போத்தல் மண்ணெண்ணெய்யைப் பயன்படுத்தி தங்களது கல்வியை நிர்வகிக்க வேண்டிய தேவை ஏற்பட்ட சூழ்நிலைகளையும் எடுத்துரைத்தார். பல்கலைக்கழக வாயிலிலேயே சுட்டுக்கொல்லப்பட்டசகமாணவர்களையும்நினைவு கூர்ந்தார். மிகவும் கடினமான காலங்களிலும் தரமான கல்வியை வழங்கியதற்காக அவர் தனது கல்வி அன்னைக்கு நன்றி தெரிவித்தார்.

இறுதி நிகழ்வாக ஆயர் அவர்கள் பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்தமையை நினைவூட்டும் ஒரு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது. அதனை சமஸ்கிருதத் துறைத் தலைவர் வண. ஐயா திரு. S. பத்மநாபன் அவர்கள் ஆயருக்கு வழங்கினார். இந்நிகழ்வானது மாலை 4.30 மணியளவில் இனிதே நிறைவு பெற்றது.

# மறை ஆசிரியர் தேசியத் தேர்வு

மறை ஆசிரியர் தேசியத் தேர்வு செப்ரெம்பர் மாதம் 10ம் திகதி நடைபெறும் என முன்னர் தங்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இப்பரீட்சை ஒக்டோபர் மாதம் 22ம் திகதி நடைபெறும் என்று தேசிய இயக்குநர் அறியத் தருகின்றார்.

**கத்தோலிக்க திருமறைத் தேர்வு**

பாடசாலைகளில் நடாத்தப்படுகின்ற கத்தோலிக்க திருமறைத் தேர்வு ஒக்டோபர் மாதம் 8ம் திகதி நடாத்துவதற்கு மாகாணக்கல்விப் பணிப்பாளரிடம் அனுமதி பெற்றிருந்தோம். மாணவர்களின் நலன் கருதி இப்பரீட்சைத் திகதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.


# விண்ணக வாழ்வின் 1ம் வருட நினைவஞ்சலி

தோற்றம்
10 . 02 . 1929



மறைவு
07 . 09 . 2021

அமரர் அருட்சகோதரி லில்லி ஓசா (A.C)

"ஆண்டவரோடு இணைந்த நிலையில் இறப்போர் பேறு பெற்றோர்.
(திருவெளிப்பாடு 14:13)

இவரது பிரிவால் துயருறும்
Dr.M.S.அலோசியஸ் (சகோதரன்) குடும்பத்தினர்,
பெறாமக்கள் குடும்பத்தினர்,
மருமக்கள் குடும்பத்தினர்
உடன் பிறவா சகோதரன் குடும்பம்
மற்றும் உற்றார், உறவினர்.

AD- 61

இளையோர் வாரம் - சிறப்பு பத்தம்

## யாழ். மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குநரின் ஆசிச் செய்தி

இளமைப் பருவம் இறைவன் தரும் அழகிய காலம். சாதிக்கும் காலம். எல்லாவற்றையும் தேர்ந்து தெளிந்து தூர நோக்கோடு செயற்படும் காலம். சிறு பராயத்திற்கும் முதுமைக்கும் நடுவிலே வாழ்க்கையை வளப்படுத்தும் காலம். உண்மைக்கும் நீதிக்கும் நேர்மை உள்ளத்தோடு குரல் கொடுக்கும் காலம். இயேசுவின் பகிரங்கப் பணி தொடங்கியது இளமைக் காலத்தில் தான். இறையரசின் வீரியமிக்க வரலாற்றை உண்மை அன்போடு இயேசு செதுக்கியது இளவயதில் தான். விடுதலையின் செய்தியை முழக்கமிட்டு, ஆலய வியாபாரிகளை அடித்து விரட்டியதும் இளமையில் தான். அவர் உண்மைக்குக் குரல் கொடுத்து இறை சித்தத்தைச் சிரமேற்கொண்டு தன் உயிரைத் தியாகப் பலியாக்கியதும் இளமைக் காலத்தில் தான்.



தரமான இளைஞர்கள் தான் எதிர்காலத் தலைவர்கள் என்பது எதிர்நோக்கு இதிலும் கிறிஸ்தவ இளைஞர்கள் என்போர் இயேசுவின் வழியில் செல்வார்கள். நிகழ்காலத்தை வாழ்வாக்கி எதிர்கால விருட்சமாக வேண்டும். தியாக சிந்தையோடும் இலட்சிய கனவோடும் வாழும் இளையோரை வாழ்த்துகின்றேன். உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேற உன்னத இறைவனை வேண்டி ஆசித்து நிற்கின்றேன்.

அருட்பணி X.W.ஜேம்ஸ்
இயக்குநர்
யாழ் மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு

# இளைஞர்கள் நம் சமூகத்தின் தூண்கள்

ஐக்கிய நாடுகள் சபையின் அங்கீகாரப் பிரகாரம் சர்வதேச இளைஞர் தினம் ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதம் 12ம் திகதி கொண்டாடப்படுகின்றது. இளைஞர்கள் ஒருநாட்டின் நிர்ணய சந்ததிகள், இளைஞர்களை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தலாம். பொதுவாக ஒரு நாட்டின் சொத்துக்களாக கருதப்படும் இளைஞர்களை நெறிப்படுத்தி சௌபாக்கியமான எதிர்காலமொன்றுக்கு வழிகாட்டுவதும் அவர்களது உணர்வுகளை சிறந்த முறையில் நெறிப்படுத்துவதும், நம்பிக்கை உணர்வினையும், வெற்றி மனப்பாங்கினையும் ஏற்படுத்துவதுடன் இளைஞர்களின் செயற்பாடுகளைக் கௌரவித்து மதிப்பளிப்பதும் இத்தினத்தின் முக்கிய நோக்கமாகக் கொள்ளப்படுகின்றது.

எதிர்நோக்கும் பிரச்சினைகளை பிரதானமாக கவனத்தில் ஈர்க்கும் முகமாக உலகளாவிய ரீதியில் அரசுகளும், அரச நிறுவனங்களும், அரசசார் பற்ற நிறுவனங்களும் செயற்படவேண்டும் என ஐக்கிய நாடுகள் சபைத் தீர்மானத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது. இளையோரை பெரும் சதவீதமாக கொண்ட ஒரு சமூகம் வன்முறைப் போக்கு எடுப்பதற்கு கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு என்றும் கூறப்படுகின்றது. சுவாமி விவேகானந்தர் “இளைஞர்கள் 100 பேரை என்னிடம் கொடுங்கள்: இந்திய நாட்டையே நல்ல நாடாகமாற்றிக் காட்டுகின்றேன்” என்று கூறியது இளைஞர் தம் சிறப்பு.

உத்வேகம், அர்ப்பணிப்பு, நாட்டுப் பற்று மிக்க இளைஞர்களை வழிநடத்திச் செல்லக் கூடிய இளமைத்துடிப்பு, சுய நலமில்லாது பாடுபடும் அர்ப்பணிப்பு, ஞானம் மிகுந்த விவேகானந்தரைப் போல் ஒரு வழிகாட்டியைக் கண்டுகொள்வது தான் இன்றையச் சூழலின் தேவையாகிறது. இன்று உலகின் எல்லாநாடுகளிலும் இளைஞர்கள் தம் திறமையை வெளிப்படுத்தி அந்த நாடுகளின் முன்னேற்றத்துக்கு உறுதுணையாக உள்ளனர். கடும் குளிர், மிகுந்த வெப்பம் என எந்தவிதமான நிலையிலும் பணிபுரியும் தகுதியுள்ளவர்கள்.

உடல் ஆற்றலுடன் அறிவாற்றலில் சிறந்து விளங்குபவர்கள் நம் நாட்டு இளைஞர்கள், உலகின் பலமுன்னோடி நிறுவனங்களின் தலைமைப் பொறுப்புக்களைத் தம் தகுதியால் அலங்கரித்து வருகின்றார்கள். பணிபுரிய சுய கௌரவம் பார்க்காமல் குடும்பப் பொறுப்புடன் செயற்படும் இளைஞர் பட்டாளம் நம்மிடையே உள்ளது. சிக்கலான கல்விகற்பதிலே முன்னணியில் நிற்பவர்கள் நம் இளைஞர்கள். தமக்கெனத் தனிப் பாதையை வகுத்துக் கொண்டு அதில் திறமையுடனும், தன்னம்பிக்கையுடனும் பயணிப்பவர்கள் தான் நம் இளைஞர்கள். இவ்விடத்தில் சோக்ரடீஸின் வரலாற்றுடன் இணைந்த ஒருசம்பவம் நினைவுக்கு வருகின்றது. ஓர் இளைஞன் சோக்ரடீஸிடம் வந்து வெற்றிக்கான இரகசியத்தைப் பற்றிக் கேட்டான். ஆற்றங்கரைக்கு வருமாறு கூறினார். அதற்கு சோக்ரடீஸ் மறுநாள் காலை ஆற்றங்கரையில் இருவரும் சந்தித்துக் கொண்டனர்.

சோக்ரடீஸ் அந்த இளைஞனை ஆற்றை நோக்கி உள்ளே வரும்படி கேட்டுக் கொண்டார். கழுத்தளவு நீர் வரை உள்ளே வந்தவுடன் அந்த இளைஞனை நீரினுள் வைத்து அமுக்கினார். அவன் வெளியேவர முயற்சி செய்தான். ஆனாலும் அவனை அப்படியே அமுக்கியவாறு அவனது முகம் நீலநிறமாக மாறும் வரை வைத்திருந்தார். சற்றுப் பொறுத்து அவனது தலையை நீரினுள்ளிருந்து வெளியே இழுத்தவுடன் காற்றை மீண்டும் மீண்டும் உள்ளிழுத்தான். சோக்ரடீஸ் அவனிடம் “நீ நீருக்குள் இருந்தபோது நீ எதை அதிகம் விரும்பினாய்?” என்று கேட்டார். அந்த இளைஞன் “காற்று” என்று பதிலளித்தான். சோக்ரடீஸ் “வெற்றியின் இரகசியமே அதுதான். நீ எவ்வளவு அதிகமாகக் காற்றை விரும்பினாயோ அதுபோன்றே வெற்றியையும் விரும்பினால் அது கிட்டும்” என்று சொன்னார். இதைத் தவிரவேறு எந்த இரகசியமும் இல்லை. இந்த உதாரணம் இளைஞர்களின் உணர்வளிக்கப்படும் முக்கியத்துவத்தை படிப்பினையுடன் எடுத்துக்காட்டுகின்றது. ஒவ்வொரு இளைஞனும் தன்னம்பிக்கையுடன் தனது பணியினை முன்னெடுக்கக் கடமைப்பட்டுள்ளான். இன்றைய இளைஞர்கள் ஒருவரைப் பின்பற்றும் போது முழுக்கமுழுக்க அவராகவே மாறிவிடக் கூடாது. மாறாக நல்ல குணங்களை மட்டும் எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற கருத்தை விவேகானந்தர் அழகாகக் கூறுகிறார்.

ஒரு விதையை நிலத்தில் போடுகிறோம் அதன் வளர்சிக்குத் தேவையான எரு, தண்ணீர் ஆகியவற்றை அளிக்கின்றோம். அவ்விதை எருவாகவோ, தண்ணீராகவோ மாறாமல் தன் இயல்பை எடுத்துக் கொண்டு பிரமாண்டமரமாகிறது. அதுபோல கற்றுக்கொள்ள வேண்டியதை மட்டும் கற்றுக் கொண்டு வாழ்க்கையில் முன்னேற வழி சொல்கிறார். ஆளவற்ற தன்னம்பிக்கை உடையவர்களாக இருங்கள்.

நான் இளமையில் அத்தகைய நம்பிக்கை உடையவனாக இருந்தேன். அதுதான் இப் பெரிய காரியங்களைச் செய்யக்கூடிய சக்தியை எனக்குளித்து இருக்கிறது. உங்கள் எதிர்கால இலட்சியத்தை நீங்கள் முடிவு செய்யவேண்டும் என்று கூறி தன்னிம்பிக்கை ஊட்டுகிறார். உங்களின்மீதும் உங்கள் திறமைகளின் மீதும் உங்களுக்கு உள்ள ஆழமான நம்பிக்கைதான் உங்கள் கனவுகளை நிறைவேற்றும் உங்கள் கனவைச் சொல்லும் போது உங்கள் வார்த்தைகளில் உயிர் துடிப்பு இருக்கவேண்டும். உங்களின் ஆர்வம் கேட்போரைத் தொடவேண்டும். உங்கள் கனவு எதுவாக இருந்தாலும் அதைசாத்தியமில்லாதது என்று ஒதுக்க வேண்டாம். சாத்தியமில்லாதது என்று எதுவுமில்லை. தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் நாணயத்தின் இரண்டு பக்கங்களை போன்றது.

தன்னம்பிக்கையோடு திட்டமிட்டு விடாமுயற்சியோடு செயல் வடிவம் கொடுக்கவேண்டும் என்று வின்ஸ்டன் சர்ச்சில் சொல்வதுண்டு. வீட்டில் ஜன்னலருகே வைக்கப்பட்டுள்ள செடியானது வெளிச்சம் தேடிவெளியே வளைந்து செல்வதைப் போலவிடாமுயற்சியுடையவர்கள் புதியபாதைகளைத் தேடிக் கொண்டு தொடர்ந்து முன்னேறுவர்,



வெற்றி பெற்றவர்கள் அனைவரும் மற்றவர்கள் உறங்கிக் கொண்டிருக்கும் போது தாங்கள் மட்டும் உணவாக உட்கொண்டவர்கள், ஒளிபடைத்த கண், உறுதிகொண்ட நெஞ்சம், களிபடைத்த மொழி, கடுமைகொண்ட தோள், தெளிவுபெற்ற மதி” என்றெல்லாம் கூறிய பாரதியின் வார்த்தைகளை இளையோர் மெய்ப்பிக்க வேண்டும். குறுகிய சிந்தனையில் வாழ்வைக் குலைத்துக் கொள்ளாமல் சமுதாய நோக்கில் சிந்தித்துசெயற்பட்டால் இளைஞர்களுக்கு வெற்றி நிச்சயம். சமூகத்தின் மீதும் பற்றும் நாட்டின் மீது காதலும் கொண்ட இளைஞர்கள் ஒருசாட்டின் பெரும் சொத்துக்கள் ஆவர். இளைஞர்களை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளும் நாடுகளே முன்னேற்ற பாதையில் பயணிக்கும் இன்றைய இளைஞர்களின் பங்களிப்பானது சமுதாயத்தில் மிகவும் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. இளைஞர்கள் மத்தியில் எதையும் சாதிக்கவேண்டும் என்றதுடிப்பும், துணிவும் இருக்கின்றது.

அப்படிப்பட்ட இளைஞர்களை உருவாக்குவது இந்த சமூகத்தின் கடமையாகும்.

படித்து முடித்த இளைஞர்கள் வெளிநாடுகளுக்கு வேலைக்கு அனுப்புவதை ஊக்குவிக்காமல் சொந்த நாட்டில் சாதனை புரிந்து

**ஞா. ஞானரதி**
**புங்குடுதீவு புனிதபிரான்சிஸ்க்கு சவோரியார். ஆலயம்.**

தாய் நாட்டின் பெருமையை பேணிக்காக்கும் உணர்வை இளைஞர்கள் மனதில் வளர்க்க வேண்டும்.இன் றைய இளைஞர்களே நாளையதலைவர்கள் அத்தகைய இளைஞர்கள் நாட்டின் சொத்துக்கள் ஆவார்கள். இளைஞர்களை நல்வழிப்படுத்தஅவர்கள் தங்களதுதிறன்களை இழந்துவிடாமல் இருக்கும் வகையில் திறன்களை மேம்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யும் போதுதிறன் மிக்க சமுதாயத்தை உருவாக்க முடியும்.

## இளைஞனே எழுந்திரு

விதைக்குள் உறங்கும் விருட்சமே
வீறுகொண்டு எழுந்து வா
பாறைகள் பிளக்கும் வேரென
பாரெங்கும் நடக்க துணிந்து வா

கஞ்சாப்புகையில் கருகாமல்
கடவுளின் கைபிடித்து நடந்து வா
பாறையாய் பாதையில் கிடக்காமல்
சிலையென உன்னை செதுக்கி வா

விடிந்தும் பாயில் புரளாமல்
வரலாற்றை எழுப்புவோம் வா நண்பா
சருகாய் காற்றில் அலையாமல்
சரித்திரம் படைப்போம்
நீ வா நண்பா

ஆன் சுகந்தினி
புங்குடுதீவு
புனிதபிரான்சிஸ்க்கு சவேரியார் ஆலயம்.

## காவலன் கலசம்

# பாவிகளின் அடைக்கலமே, தாயே...!

அன்னை மரியாவுக்கும்நமக்கு முள்ள உறவைப் புகழ்ந்து, “அடைக் கலமே, அடைக்கலமே தாயே…!” என்று, மரியன்னை பக்தர்கள் நாம் பாடுகி றோம். ஏன் “அடைக்கலம்” என்கிறோம்? -- என்று தேடினால், பதில் என்ன? மரியன் னையின் பிரார்த்தனையில் அவரை “பாவி களின் அடைக்கலமே” என்று கூவியழைக்கி றோம், இல்லையா? மரியன்னைக்குப் பிரார்த்தனை வழங்கும் இந்த வர்ணனை தான், அவருக்கு வழங்கப்பட்ட சிறப்பு நாமமாகவும் அமைந்துள்ளது. (“பாவி கள்” எனும் போது, நம்மையும் சேர்த்துத் தானே சொல்கிறோம்!)

நாம் பாவம் செய்ய நேர்ந்தால், அதனால் பிரிவினை உண்டாக்குகிறோம்: ஒன்று, நமக்கும் மற்ற மனிதருக்கும் இடையே பிரிவினை. அடுத்தது, நமக்கும் கடவுளுக்கும் இடையே பிரிவினை.

இப்பிரிவினைகளால் வரும் துன்பத்தை நாம் அனுபவிக்கும் போது, பாவத்திலிருந்து தப்பிக்க வேண்டுமென ஏங்குகிறோம். ஆனால் தப்பிப்பது எப்படி என்று தெரியாமல் தத்தளிக்கிறோம்: தத் தளிக்கும் வேளையில், அடைக்கல அன்னை நம் மனக்கண் முன் தோன்றுகிறார். “தாயே, நீர் பாவிகளின் அடைக்கலம் அல்லவோ!” என்று அவரிடம் சரணடை கிறோம், “எமக்காக உம் திருமகன் இயேசுவிடம் மன்றாடும், மனந்திரும்பி மன்னிப்புப் பெற எம்மைத் தயார்ப்படுத் தும்” என்று வேண்டுகிறோம்.

பாவம், பிரிவினையை ஏற்படுத்து கிறது. அன்போ, உறவை வளர்க்கிறது. மேலும், அன்பு இணைக்கிறது, பிரிப்ப தில்லை. அடைக்கல மாதா அன்பு மயமான வர். அவர் நம்மிடையே அன்பு உறவை முகிழ வைக்கிறார், வளர்ந்து கிளை பரப்பச் செய்கிறார். இறைவனோடு உறவைச் சீர் செய்ய வழிகாட்டுகிறார். நமது உடன் சகோதர சகோதரிகளோடு வெறுப்பற்ற அன்புப் பரிமாற்றம் செய்ய வழிசமைக் கிறார்.

அடைக்கல மாதாவின் பக்தர் கள் என்று நம்மைப் பற்றியே பெருமைப் படுகிறோம் நாம்! அப்படியிருந்தாலும், மனிதர் என்ற முறையில் நம்மிடையே வேறுபாடுகளும் ஏற்றத்தாழ்வுகளும் எழத் தான் செய்கின்றன. எனினும், அன்புமய மான அன்னை மரியின் பிள்ளைகள் தான் நாம் என்பதை ஆழ உணர்ந்து கொள்வோமென்றால், அப்போது நம் மிடையே வேற்றுமை களைந்து, அன்னை காட்டும் விதத்தில் ஒருதாய்ப்



பிள்ளைகளாய் வாழ முயல்வோம் ஒரு மனத்தவராய் ஒரே பாதையில் வீர நடை பயில்வோம். கூட்டு-ஒருங்கு-இயக்கத் திருஅவையாக உலக நீரோட்டத்தில் இணைவோம்.

**அருள்தந்தை ஜெராட் சவரிமுத்து**

## படிப்பினை

கடந்து வந்த
வரலாற்றுப் பாதைகளில்
நடந்து வந்த எம்
மூதாதையர்களின் - தவறிவிட்ட
சுவட்டு யாத்திரைகளினால்
இன்று பரிதவிக்கும்
நிலை கண்டு கலங்குகின்றோம்.

வறுமையின் படிக்குள் வாழும்
அப்பாவி மக்களின் வாழ்விற்கு
விடை பகிர முடியாத
அறிவிலிகளின் உசுப்பேற்றும்
பசுமைப் புரட்சிகளை
இனிப் பேசிப் பயனில்லை

இன்றோ நாம்
பரமணண்டை வருவொம்
பசும் புற்தரையில் அமர்வோம்
மலைப்பொழிவில் பரமனின்
இறை வார்த்தைகளை
எம் வாழ்வாக்குவோம்

பரிசுத்தராம் எம் பாப்பரசரின்
பாதம் பணிதல் கூட- ஒருவகையில்
எமக்கு படிப்பினையாக
அமையட்டும்…

**யோண் பற்றிக்**

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

நான் குருவாகி ஓர் இறையியலாளராக
உருவெடுத்ததன் பின்பு, பெரும்பாலும்
ஆசிய நாடுகளின் அடிப்படையிலும்,
எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல்
சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன்.
அவற்றை இங்கே தருகின்றேன்.
*- அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்*

15

### அத்தியாயம் 8

**தமிழ் வழிபாடுகளில் பண்பாட்டு மயமாக்குதலை ஆர்வத்துடன் நடத்தினால் மட்டும் போதாது.**



இன்றைக்கு இயேசு எங்கள் மத்தியிலே தோன்றுவாராக இருந்தால், தம்முடைய சீடர்கள், எப்படி ஆலயத்தை அமைக் கின்றார்கள், என்ன நோக்கத்திற்காக செய்கின்றார்கள் என்றும், அங்கே நடந்தேறும் சீடர்களின் கூட்டங்கள், குருக் கள் தலைமையில் நடைபெறும் வழிபாடுகள், திரு விழாக்கள் அவற்றின் வடிவங்களைப் பற்றி, அவைகளை தீர்மானிக்கும் நோக்கங்களை பற்றி, இயேசு என்னத்தைக் கூறுவார்.

**கிறிஸ்தவ ஆலயங்களின் பொருளென்ன? நோக்கமென்ன? யூத மக்க ளின் ஜெருசலேம் ஆலயத்தை, உரிமையுடன் - என் பிதாவின் வீடு - என்று அழைத்த இயேசு, தன்னுடைய இன்றைய சீடர்களின் ஆலயத்தை பற்றி என்ன கூறுவார்?**

எங்கள் வழியாகவும் உண்மையாகவும் வாழ்வாகவும் மனுவுரு எடுத்து வந்த இறை மகன் இயேசு, மனித வாழ்விற்கும் மரணத்திற்கும் இடையிலேயுள்ள தொடர்பை விளக்கி, எங் களுக்கு மரணத்திற் கப்பால் நித்தியவாழ்வு உண்டென்றும், அந்தத் திசையிலே பயணம் செய்ய எங்களுக்கு ஏதுவாக வழிகாட்டியாக, இரண்டு முக்கிய காரியங்களை செய்தார். இறைவனு டைய நற்செய்தியை வார்த்தை யாகக் கொடுத்து, அதை வாழ்வில் கடைப்பிடிக்க சக்தியாக தமது பலி விருந்தான நற்கருணையையும் கொடுத்தார். ஆகையால் இன்று தமது சீடர்கள் தமது வாழ்க்கைக்காக, ஆலயங்களை கட்டி நடத்தும் பொழுது, அவைகளின் நோக்கம், நடைமுறை கள் எப்டியாய் இருக்க வேண்டும்?

தமிழர்களின் பண்பாட்டிலே ஒரு மதசார்பான உணர்வு உண்டென்றும், இந்து - சைவ பின்னணியின் காரணமாக, எப்படி ஆலயங்கள் கட்டப் படுவது, பராமரிக்கப்படுவது, உரிமைகள் கோருவது இவைகளை மேலே சுருக்கமாக கூறியிருக்கிறேன். பாரம்பரிய பழக்கவழக்கங்கள் சிந்தனை முறைகளிலிருந்து மாறுவது தமிழ் கறிஸ்தவர்களுக்கு கடினம். ஆனால் கிறிஸதவ சாரம்சத்திற்கேற்ப எமது ஆலயங்களைப் பற்றிய பார்வையும் அணுகுமுறையும மாற்றம் வேண்டி நிற்கினறது.

இந்த இயேசு, இன்றைக்கு நாங்கள் நடத்திக்கொண்டிருக்கும் எங்களுடைய ஆலய வைபவங்களைப் பற்றி - எங்களுடைய ஆலயத் திருவிழாக்களைக் கொண்டாடும் முறை-களைப் பற்றி அவர் எதைக் கூறுவார்.

நாங்கள் பல பல மாற்றங்களைச் செய்து முன்னேறி யிருக்கின்றோம். 2ஆம் வத்திக் கான் சங்கத்தின் பின்பு எங்களுடைய வழிபாடுகள் - வார்த்தை வழிபாடும் நற்கருணை விருந் தும் - தமிழிலே முழுமையாக நடைபெறுகின்றன. மக்கள் விளங்கக்கூடிய விதமாக நடைபெறு கின்றன. மக்களுடைய பங்குபற்றுதலுடன் நடைபெறுகின்றன. (தொடரும்...)



74

# என் கேள்விக்கென்ன பதில்

*(சுதா, மன்னார்)*

**கேள்வி: சிலர், தாங்கள் வளரவும் மாட்டார்கள், மற்றவர்களை வாழவோ வளரவோவிட மாட்டார்கள்! எனி னும் தடைகளைக் தாண்டிப் பலர் வாழுகின்றார்கள், வளருகின்றார் கள்! இவர்கள் இரு சாராரையும்பற்றி என்ன கருதுகின்றீர்கள்?**

**ப:** சுதா, சில நாய்களுக்கும் சில நரி களுக்கும் ஒரு சிறுத்தைக்கும் இடையில் போட்டி ஒன்று ஏற்பாடு செய்யப்பட் டது! ‘எதுவேகமாக ஓடும் விலங்கு?’என்பது தான் அப்போட்டி! போட்டி ஆரம்பமானது. நாய்களும் நரிகளும் ஓடத்தொடங்கின. சிறுத்தை, தன் கூட்டின் கதவு திறந்திருந் தும் ஓர் அடியைக்கூட எட்டி எடுத்து வைக் காமல், அது, நாய்களும் நரிகளும் பாய்ந்து பாய்ந்து ஓடுவதைப் பார்த்துக்கொண்டு படுத்துக்கிடந்தது! பார்வையாளர்கள் மிகவே ஆச்சரியப்பட்டார்கள். சிறுத்தை ஓடாததற் கான காரணத்தைப் போட்டி ஏற்பாட்டாளர் களிடம் வினவினார்கள். போட்டியை நடத் திய நடுவர், ‘சில சமயங்களில் நீங்கள் சிறந்தவர் என்பதை மற்றவர்களுக்கு நிரூ பிக்கத் தேவையில்லை! அப்படி நிரூபிப் பதுகூட அவமானமாகிவிடும்!’ என்றாராம். உண்மையில், சிறுத்தை அதன் அதி வேகத்தைத்தன் உணவைத் தேடிக்கொள் வதற்காக - வேட்டையாடப் - பயன்படுத் தும். அதிவேகத்தையும் அதன் வலிமை யையும் சில நாய்களிடமும், சில நரிக-ளிடமும் நிரூபிக்கவேண்டிய தேவையோ,

**அருட்பணி செ. அன்புராசா**

அவசியமோ சிறுதைக்கு இல்லை, சுதா! சிறுத்தையைப்போல வேட்டையில் -உங் கள் இலக்கில் வேகம் உச்சமாக இருக்கட் டும்! நாய்களுக்கு (தடைகளை ஏற்படுத்து பவர்கள்) முன்னால் உங்களை நிரூபிக்க வேண்டிய தேவை உங்களுக்கில்லை! என்ன புரிகிறதா சுதா?

*(அமல், யாழ்ப்பாணம்)*

**கே: தங்களுக்கான உயர்வுகளை இழந்தாலும், இடர்களைச் சந்தித்தா லும் மேலாளர்களின் மிலேச்சத்தன மான நடவடிக்கைகளுக்கு அடிபணி யாமல் இருப்பதால் சிலர் கஸ்ரப்படு கின்றார்களே! அவர்கள் கொஞ்சம் வளைந்து கொடுத்துப்போகலாம் அல் லவா! உங்கள் ஆலோசனை என்ன?**

**ப:** அமல், ‘ஒரு எலும்பிற்காக ஒரு நேர் மையான மனிதன் தன்னை நாயாக்கிக் கொள்ள மாட்டான்!’ என்கின்றது ஒரு சீனப்

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

பழமொழி. எதற்கும் விலைபோகாத வேட்கை சிலருக்குள் இருப்பதால் அவர் கள் எலும்புத் துண்டைக் கண்டாலும் நாய் வாலாகத் தங்களை வளைத்துக் கொள்ள மாட்டார்கள் - வளைத்துக் கொள்ளவும் கூடாது! இடர் வந்தாலும், எதுநேர்ந்தாலும் நிமிர்ந்து நின்று நேர்மையான வழியில் செல்வதுதான் அவர்கள் வேதம்! வழி, இடுக்கமானதும் ஒடுக்கமானதும்தான்! ஆயி னும், வாழ்வுக்குச்செல்லும் வழி அதுதான்! மிக மிகச் சரி யானதே. அமல், நீங்கள் எந்த ரகம்?

*(ற. மெற்றில்டா, சுன்னாகம்)*

**கே: எவ்எம் இலங்கை வானொலி அலைவரிசைகளில் தமிழில் செய்தி வாசிக்கும் போதும் ஏனைய வர்ணனை களின் போதும் தமிழ்ச் சொற்களைக் கொலை செய்து வாசிப்பதனைக் கேட் கும்போது செய்தி வாசிப்பவர்க ளின் - அறிவிப்பாளர்களின் மண்டை யில் ரெண்டு குட்டுக் குட்டி உச் சரிப் பினைத் திருத்த வேண்டும்போல் எனக் குத் தோன்றும். உங்களுக்கு அப்ப டிக் கோபம் வருவதுண்டா?**

**ப:** சில அறிவிப்புக்களைக் கேட்கின்றபோது எனக்கும் கோபம் வந்தது உண்மைதான். இப்போது கோபம் வரும் சந்தர்ப்பங்கள் மிகக் குறைவு! ஏனென்றால், அவற்றைக் கேட்பதைக் குறைத்துக் கொண்டேன்! இது ஒருபக்கம்இருக்க, இன்னொருபக்கம்நமது மக்கள், வழிபாடுகளில் வாசிக்கும் போதும், பதில் சொல்லும் போதும் அவர்களின் உச் சரிப்புக்களை அவதானித்திருக்கின்றீர களா? உதாரணமாக, திருப்பலியில்,“இது நம்பிக்கையின் மறைபொருள்” என்று அருட்பணியாளர் சொல்ல, பதிலாக மக் கள்,‘ஏனெனில் வல்லமையும் மாட்சியும் ஆட்சியும் என்றென்றும் உமக்கு உரியதே’ எனப் பதில் சொல்லவேண்டும்.

(தொடர்ச்சி 6ம் பக்.)

# வரலாற்றில் ஒரு தலைவர்

## யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர் ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.

**யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட (மன்னார், அனுராதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த அக்கால)த் திருஅவையின் முதல் சுதேச ஆயரான ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின்(1901 - 1972) மறைவின் 50 வருடங்களை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் (17 யூலை 2022) எமது இளையோர் சமூகமும் எதிர்கால சமூகமும் இவரது வாழ்வும் பணியும் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக விசேடமாகத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்னும் இவரது கொள்கைப்பிடிப்புடனான வாழ்வும் பணியும் ஆறு தலைப்புகளின் கீழ் தொடர்கட்டுரையாகத் தரப்படுகின்றது.**



(சென்ற இதழின் தொடர்ச்சி..)

### பொதுநிலையினரின் பாரம்பரியப் பணிகள்

இவ்வாறு தாமும் அருட்பணியாளர்களும், மறைமாவட்டமும் பாதிக்கப்படும் நிலை மற்றும் புரிந்துணர்வின்மை தோன்றிய வேளையிலும் இவர் மனம் சோர்ந்துவிடவில்லை. தீமைகளைத் தடுப்பதில் உறுதியாக இருந்தபடியால் ஓரிரு கலைநய, பக்திமய, அரியபல விடயங்களும் காலவோட்டத்தில் அருகி மறைந்துவிட்டதைத் தற்போது அறிகின்றோம்.எடுத்துக்காட்டாக இவரின் காலத்திலும் அதற்கு முன்பும் பல பங்குகளில் இயற்றப்பட்ட மற்றும் பாடப்பட்ட பாடல்களும் ஏராளமான அம்மானை,பேரின்பக்காதல், சிந்தாகுலத் திரட்டு, ஒப்பாரி, போன்ற சிற்றிலக்கியங்களும் அண்ணாவி மரபு, இசை மரபு, தென்மோடி, வடமோடி நாட்டுக் கூத்து இலக்கியங்களும் அச்சேற்றப்படாமல் அழிந்துவிட்டன. அச்சேற்றப்பட்டவைகளும் கூட தொடர்ந்து அவற்றைப் புலமையுடன் பயன்படுத்தக்கூடிய புலவர்கள், கவிஞர்கள், அண்ணாவிமார் தொடர்ந்து உருவாகாமை காரணமாகவும் சந்ததிக் கையளிப்பின்மை காரணமாகவும் ஆயரின் இறுதிக்காலத்தில் இருந்தே மறைந்து போயின. ஆயினும் 'பூந்தாரான்' யோசேப்பு போன்றோரின் தன்னலமற்ற சேவை காரணமாக ஒருசில இடங்களில் கூத்துக்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாக மறையாதிருப்பதைக் காணலாம். மேலும் சில இடங்களில் மக்கள் இவருக்கு செவிசாய்க்கவில்லை. சொரூபப் பவனிக்கு ஆயத்தம் செய்யாமல் தமக்காகக் காத்திருக்கும்படி ஓர் ஆலய மக்களைக் கேட்டிருந்தார். அங்கு அவர்வந்த போது அனைத்து ஆயத்தங்களும் செய்யப்பட்டிருந்ததைக் கண்டு வளவிற்குள் வராமல் திரும்பிச் சென்றுவிட்டார். ஆலயமும் பூட்டப்பட்டது. வேறோர் கூடிய மக்கள் தொகையுள்ள ஆலயத்தில், மறைமாவட்ட ரீதியாக இடம்பெற்ற நற்கருணைப் பவனி வந்து தங்கி ஆசீர் இடம்பெற்ற பின்பு, அருகில் இருந்த குறைந்த எண்ணிக்கையுடைய மக்களின் ஆலயத்தில் தங்காமல் வீதியில் சென்ற போது, அவ்வாலய மக்களால் கறுப்புக் கொடிகள் தொங்கவிடப்பட்டமை, இவரது காலத்தில் இடம்பெற்ற மறையறிவு குறைந்த மக்களின் அறியாமையின் வெளிப்பாடாக அமைந்தது. இவைபோன்ற சம்பவங்களை தமக்குச் சாதகமாக்கிய பொதுநிலையினர் பலஉ கத்தோலிக்கத்தில் இருந்து வெளிச் சென்றமையும் வேறு கிறிஸ்தவ சபைகளில் இணைந்தமையும் துன்பியல் வரலாறாகும்.

பல வேளைகளில் பங்குத்தந்தையர்கள் இவரது முற்போக்குவாதச் செயற்பாடுகளைத் தமது பங்குகளில் செயற்படுத்த விளைந்ததன் காரணமாக பல எதிர்ப்பு களுக்கு ஆளாகி இவரையும் பங்கு மக்களையும் மனம் நொந்த சம்பவங்களும் வரலாற்று

**அருட்பணி சி.ஜே.அன்ரனி பாலா**

பங்குக் குறிப்பேடுகளில் காண்கிறோம். இத்தீமைகளின் தீவிரத்தை இவர் குறைத்ததோடு வேறுவிதமான வித்தியாசமான அணுகுமுறையுடன் கூடிய அனைத்துலகப் பரிந் துரைகளுக்காகத் தூரப்பார்வையுடன் 2ஆம் வத்திக்கான் சங்கத்தில் நேரடியாகவே பங்குபற்றிக் காத்திருந்தார்.

*3ஆவது தலைப்பு தொடரும்.-*

***மறைவாழ்வில் பதிய முன்னேற்றங்கள்.***

---

அர்த்தமுள்ள **ஆன்மீகம்**

# நலம் தரும் நம்பிக்கை

பகுதி 02

**வீ**ழ்ச்சிகள் இழப்புகளிலிருந்து நம்பிக்கை மூலம் வெற்றியும் எழுச்சியும் பெறுவதை சென்றமுறை பார்த்தோம். அவற்றினூடாக ஒரு அடிப்படை உண்மையை நாம் உணரவேண்டும். நம்பிக்கை பலவகையாக வகைப்படுத்தப்படலாம். தன்னம்பிக்கை அல்லது சுய நம்பிக்கை, பிறர் நம்பிக்கை, கூட்டு நம்பிக்கை, ஆன்மீக நம்பிக்கை அல்லது இறை நம்பிக்கை என இன்னும் பலவாறு வகைப்படுத்தலாம். கடந்த செய்தியில் நாம் பார்த்த உதாரணங்கள் எல்லாம் கூட்டு நம்பிக்கை என்று கொள்ளலாம். நம்பிக்கை எந்த வகையாக இருந்தாலும் அவற்றை மன உறுதியுடனும் ஆத்ம பலத்துடனும் இறை உணர்வுடனும் தாங்கிச் செயல்படும்போது அவைநலம் அளிக்கின்றன எனலாம்.

இன்றைய உலகின் நடைமுறைகளைப் பார்க்கும்போது, உலகத் தலைவர்கள் எடுக்கின்ற எல்லா விடயங்களும் வீழ்ச்சிகளையே சந்தித்து வருவதால் மனித இனத்தின் எதிர்காலம் குறித்த நம்பிக்கை இழந்துபோன ஒன்றாக இருக்கின்றதா அல்லது இறந்து போன ஒன்றாகி விட்டதா என்பதை சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

இன்று எந்த விடயத்தை எடுத்துக் கொண்டாலும் அவை தருகின்ற முடிவுகள் நலம் தரும் என்று எண்ணும் செயற்பாடுகள் தோல்வியைத் தருவதால் இவ்வாறு சிந்திக்கும் இயல்பு ஏற்படுவது தவிர்க்க முடியாதது. ஏனென்றால் செயற்பாடு பற்றிய நம்பிக்கை ஆன்மாதழுவிய நம்பிக்கையாக, இறை நம்பிக்கையாக உருவெடுக்கின்றபோதே அவைகடவுளின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டவையாக மாற்றம் பெற்று, இறை அருள் வளங்களுக்கு உட்படும் சந்தர்ப்பங்களைப் பெறுகின்றன.

"என் துன்பங்களின் எண்ணிக்கையை நீர் அறிவீர், உமது தோற்பையில் என் கண்ணீரைச் சேர்த்து வைத்துள்ளீர்" என்று திருப்பாடல் 56:8 கூறும் மனோநிலையில் நமது நம்பிக்கை உறுதிபெற வேண்டும். மேலும் இறைவன் நமதுஎண்ணங்களையும் ஏக்கப் பெருமூச்சுகளையும் அறிந்தவராக இருக்கிறார். இந்தநம்பிக்கை நமது மனங்களில் ஆழமாக ஏற்படுமென்றால் அவை தகுந்த காலத்தில் நமது துன்பங்களுக்கும் கண்ணீர்களுக்கும் பலன் கிட்டும் என்பதை வேதம் பல இடங்களில் தெளிவாகச் சொல்லுகிறது.

ஆதியில் இறைவன் உலகைப் படைத்தபோதுதான் படைத்த அனைத்தையும் நல்லதெனக் கண்டார். ஆனால் மனிதனைப் படைத்த பின் அனைத்தும் மிகவும் நன்றாய் இருந்தன என்று முழுப்படைப்பின் மீதும் அன்பும் நம்பிக்கையும் கொண்டு அவை அனைத்தும் படைப்பின் நோக்கத்தில் நின்று வழுவாது என மகிழ்ந்தார். ஆனால் அனைத்துப் படைப்புக்களும் இறைதிட்டப்படி வாழ மனிதன் மட்டும் இறைதிட்டத்திலிருந்து விலகிப் படைத்த இறைவனுக்கு நம்பிக்கைத் துரோகம் இழைப்பதை தொடக்கநூலில் படிக்கிறோம். இந்த நம்பிக்கை மீறல் ஏற்படவில்லை என்றால் மனித குலம் எந்த வீழ்ச்சியையும் கண்டிராமல் ஏதேன் தோட்டம் இறை உறவில், இறை அன்பில், இறை நம்பிக்கையில் மகிமை மிகு உலகமாக விளங்கியிருக்கும். அவ்வாறு இருந்திருக்கும் என்றால் நம்பிக்கை என்ற சொல்லின் மீள்கட்டுமானத்துக்கு தேவையே ஏற்பட்டிருக்காது.



ஆதிப் பெற்றோரைத் தொடர்ந்து அவர்களது வழிமரபினர் புரிந்த நம்பிக்கைத் துரோகங்களாலும் மீறல்களாலும் இறைவனே மனம் வருந்தினார். "மண்ணுலகில் மனிதரை உருவாக்கியதற்காக ஆண்டவர் மனம் வருந்தினார். அவரது உள்ளம் துயரமடைந்தது" என்று தொடக்க நூல் 6:6ல் பார்க்கிறோம்.

எனவே, இழந்து போனமனிதனின் பெறுமதியை, இறைநம்பிக்கையை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை மனித குலத்துக்கு இருக்கிறது. இந்த நம்பிக்கை வெறும்நம்பிக்கையாக இல்லாமல் இறை நம்பிக்கையாக, பிறர் நம்பிக்கையாக அதனூடாக இறை அன்பாக, பிறர் அன்பாக செயல் வடிவம் பெறுகின்றபோதே நாம் வாழும் உலகிலேயே இறைவன் விரும்பும் அரசினதும், ஆட்சியினதும், மாட்சியினதும் எழுச்சியைக் காணவும் அனுபவிக்கவும் முடியும். இந்த அனுபவங்களையே வேதம் முழுவதும் பல் வேறு நிகழ்வுகள், வரலாற்றுச் சம்பவங்களூடாகப் பார்க்கிறோம். அவற்றையே நம்பிக்கையின் செய்தியாக தொடர்ந்து கேட்போம்.

பழைய ஏற்பாட்டு நூல்க ளிலே இறைவன் நம்பிக்கையின், அன்பின், இரக்கத்தின், மன்னிப்பின் இறைவனாக இருக்கின்றார். அதனால் "ஆண்டவரை நம்புவோர்க்கு இழப்பு என்பதேயில்லை" என்று சீராக்கின் ஞானம் 32: 24 குறிப்பிடுகிறது. ஆதிப்பெற்றோரின் நம்பிக்கைத்

**அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகம்**

துரோகத்துக்காக இறைவன் அவர்களை அழித்து விடவில்லை. மாறாக, பாவப்பட்டு நிர்வாணிகளாகப்போன அவர்களை தோல் உடையால் போர்த்தி, தனது அன்பினாலும் இரக்கத்தினாலும் அவர்களை அழிக்காமல் ஏதேனைவிட்டு அகற்றினாலும் அவர்களின் எதிர்கால வாழ்வுக்கு உறுதியளிக்கிறார். நம்பிக்கையைத் தகர்த்தோருக்கே இவ்வாறென்றால் நம்பிக்கை தளராதோர் எத்துணை மேன்மை பெறுவார்கள். "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்"


## விண்ணக வாழ்வின் ஓராண்டு நினைவுகளுடன்

மண்ணில் 01 . 07 . 1950



விண்ணில் 02 . 09 . 2021

அமரர் அந்தோனிப்பறுனாந்து மரியதாஸ்

"கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின் அவரோடு வாழ்வோம்
என்பதே நாம் கொண்டுள்ள நம்பிக்கை" (உரோ. 6:18)

அன்பால் எமை அரவணைத்து
எமக்காக உடலை உருக்கி நாம் வாழ வழிசமைத்து
கடமையின் வடிவமாய் இறைவழி நின்று
உன்னதமாய் உழைப்பின் உதாரணமாய்
எம் குடும்பத்தின் தூணாய் வழிகாட்டியாய்
எம் உயர்வின் ஆசானாய் வாழ்ந்தீரே!
ஓராண்டென்ன எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
எம் இதயத்தில் உம் நினைவுகள் என்றுமே அழியாது

உம் ஆன்மா இறைவனில் அமைதிபெற இறைஞ்சி நிற்கின்றோம்.
ஈர விழிகளுடனும் கனத்த இதயங்களுடனும்...


பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

4ம் வட்டாரம், மண்டைதீவு

AD- 58

# காவலன் கலசம்

# திருச்சிலுவையின் மகிமை விழா



## புரட்டாதி-14

திருச்சிலுவை அருட்சகோதரிகளாகிய நாம் திருச்சிலுவையை இயேசுவோடு இணைந்து எமது நெஞ்சங்களில் தாங்கி யிருப்பதால் உற்சாகம் அடைகின்றோம். இவ்வருடம் திருச்சிலுவை அருட்சகோத ரிகளின் சபை நிறுவுனரின் பிறப்பின் 200ம் ஆண்டு நிறைவினை மகிழ்வுடன் நினைவுகூருகின்றோம். எமது சபை பணி வாழ்வில் 175 வருடங்களை நிறைவு செய்ததையிட்டுடன், திருச்சிலுவை அருட்சகோ தரிகள் தொடர்ந்தும் பயணிப்பது திருச்சிலுவையின் ஆன்மீகத்தினால் நாம் அடைந்த வெற்றியாகும்.

மனித வாழ்வின் உண்மை நிலையினை எமக்கு மீள நினைவூட்டுவது திருச்சிலுவையின் மகிமையின் விழா என்றால் மிகவும் பொருத்தமானது. நாம் சிலுவையையும், பாடுபட்டு அறையப்பட்ட இயேசுவையும் தாங்கிச் செல்வதற்கு ஓர் அர்த்தமுண்டு. தனியாக காணப்படும் சிலுவை இயேசுவின் உடலைக் கொண்டி ராது. இச்சிலுவை இயேசுவின் உடலைத் தாங்கியதால் மகிமை அடைந்தது. இயேசு சிலுவையில் மரித்து உயிர்த்ததினால் சிலுவை வெற்றியின் சின்னமாக மாறியது.

எமது நம்பிக்கை பாடுபட்டு, மறு தலிக்கப்பட்டு, நிர்வாணமாக்கப்பட்டு சிலு- வையில் அறையப்பட்டு இறந்த இயேசு வில் அல்ல, மாறாக தன்மானத்துடன் உயிர்த் தெழுந்து இருகரம் நீட்டி அரவணைப்பவராய் வெற்றி கொண்ட வாழும் கிறிஸ்து விலா கும். ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நாம் வரையும் சிலுவை அடையாளம் வல்லமை பொருந்தியது. கிறிஸ்தவர்களை எல்லாச் செயற்பாடுகளிலும் வழிநடத்தி நிற்கின்றது. உயிர்த்த கிறிஸ்து எமது முயற்சிகளை வெற்றியுடையவராக்குகின்றார்.

பழைய ஏற்பாட்டில் மோசே வெண் கலத்தில் பாம்பினைச் செய்து உயர்த்திய தால் பாம்பினால் தீண்டப்பட்ட யாவரும் குணமடைந்தனர். கிறிஸ்து மண்ணகத் திலிருந்து விண்ணகம் நோக்கித் தமது உயிர்ப்பினால் ஏறிச் சென்றதால் எமக்குப் புதுவாழ்விற்கு வழி சமைத்தார். இதனால் சிலுவை மரணம் இயேசுவுக்குச் சிறப் புடையதானது. சிலுவை மகிமை பெற் றதுடன் பெருமைக்குரியதாகவும் வெற்றி யின் சின்னமாகவும் விளங்குகிறது.

திருத்தூதர் புனிதர் பவுல் (கலாத்தியர் 6:14) "இயேசுக்கிறிஸ்துவின் சிலுவையை அன்றி வேறு எதைப்பற்றி யும் ஒருபோதும் பெருமை பாராட்டமாட் டேன்" எனக் குறிப்பிடுகின்றார். ஏனெ னில் அவர் கிறிஸ்துவை தமது வாழ் வில் அனுபவித்து அவருக்காக பல இன்னல்கள் அனுபவித்து கிறிஸ்தவ மறையைப்பரப்ப பாடுபட்டு உழைத்தவர்.

திருஅவை வரலாற்றில் கிறிஸ்து வின் அடியைப் பின்பற்றிக் கத் தோலிக்க திருமறையின் விசுவாச வாழ்விற்காக தம்மை அர்ப்பணித்த திருத் தூதர்கள், புனிதர்கள், வேதசாட் சிக்கள், மறை வல்லுநர்கள் யாவ ரும் கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டு பயணித்தவர்கள். இவர்களின் கடின உழைப்பி லும், சிந்திய இரத்தத்திலும் கத்தோலிக்க விசுவாசம் அடித்தளமிடப்படுகின்றது.

கிறிஸ்துவில் நம் பிக்கை கொண்டோர் யாவரும் தவற விடப்படமாட்டார்கள். இறுதியில் முடிவில்லா வாழ்வை பெற்றுக்கொள் வார்கள்.

புனித பிரான் சிஸ் அசிசி தனது ஐந்து காய வரத்தினை புரட்டாதி 14ம் நாள் அன்றே பெற்றுக்கொண் டார். ஏனெனில் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் மேல் அதிக அன்பு கொண்டு தன் செல்வங்கள் அனைத்தையும் புறந்தள்ளி அர்ப்பணிப்புள்ள தியான சிந்தனையுள்ள சீடனாக வாழ்ந்தவர். தனது வாழ்வில் சிலு- வைகளை நல்ல மனத்துடன் விரும்பி ஏற்றுக்கொண்டவர். இதனால் கிறிஸ்துவைப் போல் ஐந்து காயங்களைத் தன் உடலில் பெற்றுக்கொண்டார்.

இன்றும் நம்மிடையே இயேசுவின் மேல் அதிக அன்பு கொண்டு ஐந்து காயங் கள் வரமாகப் பெற்றவர்கள் வாழ்வது நாம் அறிந்ததே. எமது வாழ்வில் நாம் சந்திக்கும் சிலுவைகளை நல்ல மனதுடன் ஏற்று கிறிஸ்து வின் அன்பிற்காக எம்மை அர்ப்பணித்து வாழும் வாழ்விற்கு திருச்சிலுவையின் மகி மையின் விழா அமைந்து நிற்கின்றது. சான்று பகரும் வாழ்வினால் நாமும் திருச்சிலுவைக்கு மகிமை சேர்ப்பவர்களாக வாழ்ந்து, இயேசு வின் சாயலை நம்மில் தாங்கிச் செல்லும் மனித உள்ளங்களாக வாழ்ந்திடுவோம்.

அருட்சகோதரி
ரோமலா அன்ரனி (HC)

---

## என் கேள்விக்கென்ன பதில்?

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், இப்போதெல்லாம் பரவலாக, 'ஏனெனில் வல்ல மையும் மாட்சியும், ஆட்சியும், என்றென்றும் உமக்கு உரியதே' என ஒலிக்கும்! அதாவது மாட்சியும், ஆட்சியும் ஆகிய சொற்களின் 'ட்', என்ற எழுத்தையும் 'ட்'க்கும் 'சி'க்கும் இடையில் 'ச்'என்ற எழுத்து வராவிட்டாலும் அதன் ஒலி அங்கே கட்டாயமாக ஒலிக்கவேண்டும். ஆனால், அது இப்போது ஒலிப்பதாகத் தெரியவில்லை! மெற்றில்டா அக்கா, உச்சரிப்புப் பிழையெனக் குட்டுவ தென்றால் எத்தனை பேருக்குக் குட்டுவது? அப்படித்தான், குட்டப்போகின்றீர்கள் என்றால் நற்கருணை கொடுக்கப் பணியாளர்கள் தொடங்கியதும் அவர்கள் பின்னாலே சென்றால் ஒழுங்குமுறையாக எல்லோருக்கும் குட்டக் கூடியதாக இருக்கும்! எதற்கும் பங்குத்தந்தையிடம் முன்னனுமதி பெற்றுக்கொள்ளுங்கள் அல்லது உங்க ளுக்குக் குட்டுவதோடு கொட்டியும் விடுவார்!

*(யோசப், யாழ்ப்பாணம்)*

**கே: இன்றைய இளையோர் மாறிவரும் உலகில் எல்லாவற்றையும் நன்றாகத் தெரிந்து வைத் திருக்கின்றார்கள்! ஆனால், சின்னச்சின்ன விட யங்களில் - மிகவும் முக்கியமாகக் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்களில் அவர்களின் கவனம் இருப்பதாய் தெரியவில்லை! காரணம் என்ன!**

**ப:** யோசவ், இந்த உண்மையை இறையன்பு என்ற எழுத்தாளன் பின்வருமாறு அவதானிக்கின்றான்: "இன்றைய இளம் வயதினர் சிலருக்குக் கணணியை இயக்குவது நன்றாகத் தெரிகிறது. ஆனால், பயன்படுத் திய போர்வையை மடித்து வைக்கத்தான் தெரிய வில்லை! கைபேசியை அவ்வப்போது சுத்தம் செய்யத் தெரிகின்றது. ஆனால், சாப்பிட்ட பிறகு தட்டை கழுவி வைப்பதுதான் கடினமாக இருக்கின்றது! 'ஆன்லைனில்' பயணத்திற்குப் பதிவு செய்யும் வித்தை தெரிகிறது. ஆனால், எதிரே அமர்ந்திருக்கும் பயணியைப் பார்த்துப் புன்னகைக் கத்தான் தெரிவதில்லை! 'வாட்ஸ்அப் குரூப்பில்' அன்பு சொட்டச் சொட்ட நண்பர்களிடம் தகவல் பரிமாற முடிகிறது. ஆனால், சொந்தப் பெற்றோரிடம் தூக்கி யடிப்பது போல பேசத்தான் முடிகிறது! எந்த இடத்திலும் ஒரு நிமிடம் தாமதமானால் கோபம் கொப்பளித்துக் கொள்கிறது. ஆனால் அவர்களுக்காகக் காத்திருக்கும் பெற்றோரின் வலி புரிவதில்லை! எதைப் பெற்றாலும் உரிமையென எண்ணும் அவர்களுக்குக் கடமை களும் இருக்கின்றன என்பது ஒருபோதும் உறைப்ப தில்லை!" காரணம் புரிகிறதா யோசவ்!

*(றொஷான், யாழ்ப்பாணம்)*

**கே: அரசு பொருட்களின் விலையைக் குறைத் தாலும் வியாபாரிகள் பொருட்களின் விலைகளைக் குறைக்கின்றார்கள் இல்லையே! என்ன செய்ய லாம்? இவர்களை மாற்றுவதற்கு வழியே இல்லையா?**

**ப:** சில தரமான வழிகள் உண்டு றொஷான். அண் மையில் படித்த ஒரு உண்மைச்சம்பவம். ஆர்ஜென்டினா நாட் டில் நடந்த இந்தச் சம்பவத்தைக் கேளுங்கள். தற்போது நமது நாட்டில் முட்டைவிலை மிக உயர்வாக இருப்பது போல அந்த நாட்டிலும் முட்டைக்கான விலை ஒரு- தடவை மிக மோசமாக உயர்வடைந்து சென்றது. கடை வியாபாரிகள், உற்பத்தி நிறுவனங்கள் விலையை உயர்த்திவிட்டார்கள் எனக் கூறித் தப்பித்துக்கொள்ளப் பார்த்தார்கள். ஆனால் பொதுமக்கள் ஒரு வித்தியாசமான அணுகுமுறையைக் கையாண்டார்கள். ஒரே தடவை யில் பல பொதுமக்கள் தமக்கு முட்டை தேவையில்லை என்றும் முட்டையில்லாமல் சாப்பிடலாம் என்றும் முட்டை வாங்குவதை புறக்கணித்தார்கள். இதனால் முட்டைப் பாவனையை நாட்டின் பெரும்பாலானோர் கைவிட்டு விட்டார்கள். இதற்குப் பிரச்சாரங்களோ, வேலைநிறுத் தங்களோ, கடையடைப்புக்களோ அல்லது கர்த்தாலோ தேவைப்படவில்லை! சில நாட்கள் செல்ல, முட்டை உற் பத்தி நிறுவனங்கள் முட்டைகளுடன் கடைகளுக்கு வந் தார்கள். வியாபாரிகள் ஏற்கனவே முட்டைகள் கையிருப் பில் இருந்ததால் கொள்வனவு செய்யமுடியாது எனக் கைவிரித்தார்கள். முட்டை உற்பத்தி நிறுவனங்களும் பிடிவாதமாக நின்றன. சில நாட்களில் இப்புறக்கணிப்பு முடிவுக்கு வந்து மக்கள் முட்டையைக் கொள்வனவு செய் வார்கள் என உற்பத்தி நிறுவனங்கள் நம்பின. ஆனால், மக்களோ உற்பத்தி நிறுவனங்களைவிட தமது தீர்மானத் தில் பிடிவாதமாயிருந்தார்கள். உற்பத்தி நிறுவனங்கள் இரண்டு விதமான பெரிய இழப்புக்களுக்கு முகம்கொடுத் தார்கள். ஒன்று, ஏற்கனவே விற்பனை செய்யப்படாத முட்டைகள். இரண்டு, வருமானமின்றிக் கோழிகளைப் பராமரிப்பதில் உள்ள செலவுகள்! நிறுவன உரிமை யாளர்கள் ஒன்றுகூடி வேறு வழியின்றி முட்டைகளை முன்னைய விலைக்கே விற்கத் தீர்மானித்தனர். ஆனால், மக்கள் தங்கள் புறக்கணிப்புத் தொடர்ந்தது. கடைசியில், நிறு வன உரிமையாளர்கள் அனைத்து ஊடகங்களிலும் தோன்றி ஆர்ஜென்ரீனா மக்களிடம் மன்னிப்புக் கோரி னர். முட்டைகளை அதன் அரைவாசி விலைக்கு விற்க முடிவு செய்தனர். பிரச்சாரங்களின்றி, வேலைநிறுத்த மின்றி, கர்த்தாலின்றி, கடையடைப்பின்றி மக்களால் விலை யைக் குறைக்க முடிந்தது - முடியும். அதற்குத் தேவை- யானது ஒற்றுமையும் சமூக அக்கறையும். நம்மவர்கள் செய்வார்களா றொஷான்? நம்மவர்களின் பிரச்சனையே ஒன்றுசேர்ந்து ஒற்றுமையாக நிற்பதுதானே! தமிழ்த் தரப் பில் மட்டும் முப்பதுக்கு மேற்பட்ட கட்சிகள் தகவல்! இன் னும் எத்தனை எத்தனை உருவாகப் போகின்றனவோ? எப்படி ஒற்றுமைப்படுவது, எப்படி ஒற்றுமைப்படுத்துவது?

---

## 'திருமறை முத்துக்கள்'

அருட்பணி. தே. யூட்தாஸ்

### செபம்

**175. ஏன் இறைவன் "எங்கள் தந்தையே" என அழைக் கப்படுகிறார்?**

இறைவன் 'எங்கள் தந்தையே' என அழைக்கப்படு கின்றார். ஏனென்றால் திருமுழுக்கு என்ற அருளடையாளத்தினூடாக இறைவனின்பிள்ளைகளாக்கப்பட்ட அனைத்துக் கிறிஸ்தவர்களு டைய தந்தையாக அவர் விளங்குகின்றார்.

**176. இறைவன் அனைத்து மனிதர்களிற்கும் தந்தையாக விளங்குகின்றாரா?**

இறைவன் அனைத்து மனிதர்களிற்கும் தந்தையாக விளங்குகின்றார். காரணம் அவரே அனைவரையும் உருவாக் கினார், பாதுகாத்து வருகிறார்.

**177. ஏன் நாம் 'எனது தந்தை' என அழைக்காமல் 'எமது தந்தை' என அழைக்கின்றோம்?**

நாம் 'எமது தந்தையென' அழைக்கின்றோம் ஏனென்றால் நாம் எல்லோரும் சகோதரர்கள். எமக்கு மாத்திரமல்ல மற்ற வர்களுக்காகவும் செபிக்க அழைக்கப்படுகின்றோம்.

**178."உமது பெயர் தூயதென போற்றப்பெறுக" என்பது குறித்துக்காட்டுவது யாது?**

'உமது பெயர் தூயதென போற்றப்பெறுக' என்று நாங்கள் கூறுகின்ற போது அனைத்துப் படைப்புக்களாலும் இறைவன் அறியப்படவும் அன்பு செய்யப்படவும் பணிசெய்யப்படவும் மகி மைப்படுத்தப்படவும் வேண்டுமென செபிக்கின்றோம்.

**179."உமது இராட்சியம் வருக" என்று சொல்லுகிறபோது நாம் எதற்காகச் செபிக்கின்றோம்?**

'உமது இராட்சியம் வருக' என்று செபிக்கின்ற போது இவ்வுலகில் எல்லோருடைய இதயங்களிலும் இறையருள் கிடைக் கவும் இறையாட்சி மலரவும் மறுவுலகில் விண்ணக வீட்டிற்கு அழைத்து செல்லு மாறும் செபிக்கின்றோம்.

**180."உமது திருவுளம் விண்ணுலகில் நிறை வேறு வது போல மண்ணுலகிலும் நிறைவேறுக" என நாம் செபிப்பது எதற்காக?**

'உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக' என நாம் செபிக்கின்ற போது விண்ணுலகில் இருக்கின்ற தூயவர்களைப்போல் நாமும் எமது அனைத்து செயற்பாடுகளிலும் இறையருளூடாக அவருடைய திருவுளத்தை நிறைவேற்றுவதற்கு தேவையான அருளுக் காகச் செபிக்கின்றோம்.

**181. "எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும்" என்று கூறுகின்றபோது நாம் எதற்காகச் செபிக்கின்றோம்?**

'எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும்' என்று நாங்கள் செபிக்கின்றபோது எமது ஆன்மாவிற்கும் உடலிற்கும் அன்றாடம் தேவையான அனைத்து நலன்களை யும் இறைவன் எமக்குத் தரும்படி செபிக்கின்றோம்.

**182.திரு அவை பாவிக்கின்ற அன்னை மரியாவுக்குரிய சிறப்பான செபம் யாது?**

"அருள்நிறை மரியே வாழ்க" என்கின்ற செபம் அன்னை மரியாவுக்குரிய சிறப்பான செபமாகத் திரு அவையால் பாவிக்கப் படுகின்றது.

(தொடரும்...)

## விழிநீரில் நனைந்த முதலாம் ஆண்டு நிலைவலைகள்

மண்ணக வாழ்வில்
06
.
11
.
1945



விண்ணக வழியில்
13
.
09
.
2021

### அமரர் சின்னப்பு நாயகம் லோறன்ஸ் சவுந்தரநாயகம்

[ஓய்வு நிலை கணித ஆசிரியர்]

உன் பெயரைச் சொல்லி உன்னை அழைத்தேன்
நீ எனக்கு உரியவன் (எசா. 13:1)

உன் அன்பைத் தோற்கடிக்கும் மற்றொரு
அன்பை உலகில் யாரும் தரப்போவதில்லை
உன்னைத் தவிர...

118, 4ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

உம் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

AD- 60

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
25
.
02
.
1946



விண்ணில்
13
.
09
.
2021

அமரர்

### யூஜின் சுப்பிரமணியம்

*"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கைகொள்பவர் இறப்பினும் வாழ்வார்"* (யோவான் 11:25)

அன்புத் தந்தையே இறைவா! நீர் உம்மிடம் அழைத்துக் கொண்ட உமது அன்பு மகன் யூஜின் சுப்பிரமணியம் என்பவரின் விசுவாசம் நிறைந்த வாழ்விற்காகவும், நீர் அளித்த கொடைகளுக்காகவும் உமக்கு நன்றி கூறுகின்றோம். இவரின் பாவங்களையும், குறை- களையும் மன்னித்து நிலை வாழ்வையும் புனிதர்களின் தோழமையுள்ள உறவையும் கொடுத்தருள உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்.

Ad 55

சொலமன் இல்லம்,
கல்வியற் கல்லூரி வீதி,
2ம் கட்டை,
கோப்பாய் மத்தி.

பிரிவால் துயருறும்,
மனைவி, உறவினர்கள்,
நண்பர்கள்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
29
.
12
.
1948



விண்ணில்
17
.
09
.
2021

### அமரர் திருமதி ஜோர்ச் நசரேத்தம்மா

துன்பங்கள் உங்களை துவட்டியதுமில்லை
சோகங்களில் நீங்கள் புதைந்து போகவுமில்லை
செழிப்பான முகம் வசீகரப்புன்னகை
நிதானமான பேச்சு சுயகௌரவம்
பொறுமை சற்றும் குறையாத மிடுக்கு
இவைதான் உன் அணிகலன்கள்
உங்களிடம் கற்றுக்கொள்ள நிறைய உள்ளன அம்மா!
நீங்கள் இன்னும் கொஞ்சக்காலம் இருந்திருக்கலாமே அம்மா!
உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

2ம் வட்டாரம்,
மண்டைதீவு.

பிள்ளைகள், குடும்பத்தினர்

AD- 57

## 15ம் ஆண்டு நினைவுகளுடன்

மண்ணில்
14
.
05
.
1947



விண்ணில்
27
.
08
.
2007

### அருட்பணி பிரான்சிஸ் பொனிவஸ்

தாய் மடியில் : 1947
அருட்பணியில் : 1977
இறையடியில் : 2007

மண்ணுலகில் அறுபது வருடங்கள்
விண்ணுலகில் பதினைந்து வருடங்கள்
என்றும் நீங்காத நினைவுகளுடன்

கரம்பொன்,
ஊர்காவற்றுறை.

சகோதர, சகோதரிகள்

AD-62

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
17
.
01
.
1948



விண்ணில்
29
.
08
.
2021

### அமரர் சந்தியாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை (கிளி)

"சீவியத்தில் நேசித்தவர்களை மரணத்தில் மறவாதீர்கள்"

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
பாசத்தின் உறைவிடமாய்..
நற்குணங்களின் சிகரமாய்,
இறைபக்தியில் சிறந்து விளங்கி - எம்மை
விசுவாச நல்வாழ்வில் வாழ
வழி வகுத்த எம் தந்தையே
உம் வாழ்வு விண்ணில் நித்திய வாழ்வாக
வாழ இறைவன் பாதம்
பணிந்து வேண்டி நிற்கின்றோம்.

11ம் வட்டாரம்,
புங்குடுதீவு
தொடர்புகளுக்கு: 021 43966212

ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்

AD- 59

## இறைவனின் பிரசன்னத்தில் 9ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
15
.
06
.
1936



விண்ணில்
07
.
09
.
2013

### அமரர் மோசஸ் பெனடிக்ற் ஆசீர்வாதம்

"நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்து போனாலும் கடவுளிடமிருந்து கிடைக்கும் வீடு ஒன்று விண்ணுலகில் நமக்கு உண்டு" (2 கொரி. 5:1)

இரக்கம் நிறைந்த இறைவன் இவருக்கு
நித்திய இளைப்பாற்றி அளிப்பாராக

இல 182, 2ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

அன்புடன் நினைவுகூரும்
மனைவி, உறவினர்

AD- 56

## பிலிப்பு நேரியார் ஆலயத்திற்கான
# அடிக்கல் நாட்டல்



செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு பங்குத் தந்தை அருட்திரு டியூக் வின்சன் அவர்கள் தலைமையில் கடந்த 25ஆம் திகதி நடைபெற்றது.

புதிய ஆலயத்திற்கான அடிக்கல்லை யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் அவர்கள் நாட்டிவைத்து சம்பிர தாயபூர்வமாக புதிய ஆலயத்தின் வேலைகளை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் ஆலயக் கட்டட நிர்வாகக் குழு உறுப்பினர்கள், புலம்பெயர் உறவுகள் மற்றும் பங்குமக்களெனப் பலரும் கலந்துகொண்டனர்.

## நாச்சிக்குடா புனித வேளாங்கண்ணி
# ஆலயத் திறப்புவிழா



கிளிநொச்சி மறைக்கோட்டத்தில் அமைந்துள்ள குமுழமுனைப் பங்கிலுள்ள நாச்சிக்குடா புனித வேளாங்கண்ணி ஆலயம் புதிதாக அமைக்கப்பட்டு கடந்த 21ஆம் திகதி யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் ஆசீர்வதித்துத் திறந்து வைக்கப்பட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

பங்குத்தந்தை அருட்திரு நிதர்சன் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் குருக்கள் துறவிகள் பங்குமக்களென ஏராளமானவர்கள் கலந்துகொண்டனர்.

இவ்வாலயத்திற்கான அடிக்கல் 2018ஆம் ஆண்டு ஆவணி மாதம் அப்போதைய பங்குத்தந்தை அருட்திரு சுமன் அவர்களின் தலைமையில் கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு றெக்னோ அவர்களால் நாட்டி வைக்கப்பட்டது.

இவ்வாலயம் தற்போதையபங்குத்தந்தை அவர்களின் வழிநடத்தலில் உள்நாட்டு வெளிநாட்டு மக்களின் நிதியுதவியுடன் கட்டுமானப்பணிகள் நிறைவடைந்து அழகிய தோற்றத்துடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## பிரட்றிக் ஓசானம் இளையோர் பந்தி உதயம்



யாழ். மறைமாவட்டத்தில் முதல் முதலாகக் கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத் திரு அவையில் புனித வின்சன் டி போல் இளையோர் பந்தியானது 21.08.2022 அன்று மத்திய சபையின் ஆன்ம ஆலோசகர் அருட்திரு செ. நேசநாயகம் அடிகளாரதும் கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் பந்தியின் ஆன்ம ஆலோசகர் அருட்திரு S.M.P ஆனந்தகுமார் அடிகளாரதும் ஆசீருடன் ஆரம்பிக்கப் பட்டது.

24 உறுப்பினர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இப் பந்தியானது "பிரட்றிக் ஓசானம் இளையோர் பந்தி" என நாமம் சூட்டப்பட்டு அழைக்கப்படுகின்றது. இந் நிகழ்வில் மத்திய சபையினதும் கிறிஸ்து அரசர் பந்தியினதும் நிர்வாக உறுப்பினர்களும் அங்கத் தவர்களும் பங்கு பற்றினார்கள்.

# யாழ்.திருக்குடும்பச் சபைக்கு புதிய தலைமைத்துவக் குழு



போர்டோவின் திருக்குடும்ப அருட்சகோதரிகள் யாழ். மாகாணக் குழுமத்தின் புதிய தலைமைத்துவக் குழு கடந்த 22ஆம் திகதி உத்தியோகபூர்வமாகப் பணிப்பொறுப்பை ஏற்றுக் கொண்டது.

இந்நிகழ்வு யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் நடைபெற்றதுடன், இதனை சிறப்பிக்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நன்றித் திருப்பலியை யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு ப.யோ. ஜெபரட்ணம் அடிகள் தலைமை தாங்கி நிறைவேற்றினார்.

அருட்சகோதரி தியோபின் குருஸ் சிங்கராயன் அவர்களை மாகாணத் தலைவியாகவும் அருட்சகோதரி மரிஸ்ரெலா சூசைப்பிள்ளை அவர்களைப் பொருளாளராகவும் கொண்ட இப்புதிய குழு 22வது தலைமைத்துவக் குழுவாக அமைந்துள்ளதுடன் வருகின்ற மூன்று வருடங்களுக்குப் பணியாற்றவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# புனிதர்கள் போர் காற்பந்தாட்ட வெற்றிக்
## கிண்ணத்தைக் கைப்பற்றியது புனித பத்திரிசியார் கல்லூரி



தேசிய ரீதியில் நடைபெற்ற புனிதர்கள் போர் காற்பந்தாட்ட வெற்றிக் கிண்ணத்திற்கான இறுதிப்போட்டியில் இளவாலை சென். கென்றிஸ் கல்லூரியுடன் மோதிய புனித பத்திரிசியார் கல்லூரி 7 : 7 என இரு அணிகளும் சமநிலையை அடைய போட்டி நிபந்தனையின்படி நாணயச் சுழற்சியின் மூலம் புனித பத்திரிசியார் கல்லூரி கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

# ஆனையூர் திருப்பாலத்துவ சபை சிறார்கள் சுற்றுலா



ஆனையூர் திருப்பாலத்துவ சபை சிறார்கள் ஒருநாள் சுற்றுலாவாக இளவாலை சேந்தான்குளம் அந்தோனியார் ஆலயத்திற்கும் மாதகல் லூர்து அன்னைத் திருத்தலத்திற்கும் பங்குத் தந்தை அருட்பணி ஏ. ஞானப்பிரகாசம் அடிகளாருடன் பயணித்திருந்தனர்.

இரு இடங்களிலும் சிறார்களுக்கான கலை நிகழ்வுகளும், பாசறைப் பயிற்சிகளும் வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஹென்றியரசர் கல்லூரியில்
## மாணவத் தலைவர்களுக்கான சின்னம்



இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு பாடசாலை முதல்வர் அருட்திரு மைக் மயூரன் அடிகள் தலைமையில் கடந்த 26ஆம் திகதி நடைபெற்றது. வருகின்ற இரண்டு வருடங்கள் மாணவத் தலைவர்களாகப் பணியாற்ற 34 மாணவர்களுக்கு இந்நிகழ்வில் சின்னம் சூட்டப்பட்டது.

இந்நிகழ்வில் அருட்திரு ஜோ சனிஸ்ரன் அடிகள் பிரதம விருந்தினராக கலந்து நிகழ்வை சிறப்பித்தார். இதன்போது குருத்துவத்தில் 25வது வெள்ளிவிழாவை இவ்வருடம் கொண்டாடும் அருட்தந்தை ஜோ. சனிஸ்ரன் அடிகளை பாடசாலைக் குழுமம் வாழ்த்தியது.

## தேசிய ரீதியிலான திருவிவிலிய அறிவுப் போட்டி



மறைக்கல்வி மாணவர்களுக்கான தேசிய ரீதியில் நடைபெற்ற திருவிவிலிய அறிவுத்தேர்வு கடந்த 27ம் திகதி நடைபெற்றது.

யாழ். மறைமாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 9 இடங்களில் நடைபெற்ற இப்பரீட்சையில் 500ற்கும் அதிகமான மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றினார்கள்.

# நவாலிப்பங்கில் உறுதிப்பூசுதல்



நவாலிப் பங்கிலுள்ள பிள்ளைகளுக்கான உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்திரு அன்ரனிதாஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 23ஆம் திகதி புனித பேதுருவானவர் ஆலயத்தில் நடைபெற்றது.

யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெற்ற திருப்பலியில் 57 பிள்ளைகள் உறுதிப்பூசுதல் அருட்சாதனத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2022ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 04ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.